**<u>கூட்ட நடவடிக்கைகள்</u>**

**1.** M/s Enteeon Organics, இடைப்பாடி நிறுவனத்தார் அவர்கள் தங்களது கால்நடை தீவனம் தயாரிக்கும் நிறுவனத்திற்கு ஒரு நாளைக்கு 10 மெ.டன் கரிம கழிவுகள் (Organic Waste)/இறைச்சி கழிவுகள் (Non-Veg Waste) தேவைப்படுவதால். இம்மாநகராட்சிப் பகுதியில் சேகரமாகும கரிம கழிவுகள் (Organic Waste)/இறைச்சி கழிவுகள் (Non-Veg Waste) தங்களுக்கு வழங்குமாறும், அதற்கான போக்குவரத்து ஏற்பாடுகளையும் தாங்களே செய்து கொள்வதாகவும் தெரிவித்துள்ளனர்.

எனவே கரிம கழிவுகள் (Organic Waste)/ இறைச்சி கழிவுகள் (Non-Veg Waste) மேற்கண்ட நிறுவனத்துக்கு வழங்குவது தொடர்பாகவும் M/s Enteeon Organics, இடைப்பாடி நிறுவனத்துடன் புரிந்துணர்வு கடிதம் வழங்கி ஒப்பந்தம் மேற்கொள்ளவும், மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு-</u>**

மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

**ந.க.எண்.எச்1-5702-2022**

**280. அனுமதி வழங்கப்பட்டது.**

2. ஈரோடு மாநகராட்சி மண்டலம்-1, வார்டு எண்.2 சூரியம்பாளையம் கிராமம் ரீ.ச.எண். 157/1A2-ல் 2.00 ஏக்கர் (8106.00 ச.மீ) பரப்பளவில் 40 வீட்டுமனைகளாக பிரிவினை செய்த குடியிருப்பு மனைப்பிரிவிற்கு உறுப்பினர் செயலர் (பொ), சித்தோடு புதுநகர் வளர்ச்சிக்குழுமம், ஈரோடு அவர்களின் கடித ந.க.எண். 3998/2021/ஈ.மா-4 நாள் 11.03.2022-ன்படி மனைப்பிரிவு வரைபடத்திற்கு ம.வ/ ஈமா (சிபுநவகு) எண். 1/2022 எண்ணில் சிறப்பு நிபந்தனைகளுடன் திட்ட அனுமதி வழங்கப்பட்டுள்ள்ளதை தொடர்ந்து மனைப்பிரிவில் உள்ள பொது உபயோக இடம் மற்றும் சாலைகளை ஈரோடு மாநகராட்சிக்கு ஒப்படைக்க தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி மனுதாரர் திருமதி.டி.ஜோதி ஈரோடு அவர்களால் ஈரோடு மாநகராட்சி ஆணையருக்கு சாலை மற்றும் பொது இடத்தினை பத்திர பதிவு எண்.1/6504/2021 நாள் 02.11.2021 மற்றும் 1/825/2022 நாள் 07.02.2022 வாயிலாக தானசாசனம் மூலம் சொத்துக்களை ஒப்படைத்து உள்ளார்கள். மேற்படி மனைப்பிரிவிற்கு மனைப்பிரிவு நிபந்தனைகளின்படி ஒப்புதல் வழங்கப்பட்ட குடியிருப்பு மனைப்பிரிவிற்கு மனைப்பிரிவு நிபந்தனை எண். 18(ஈ)-ன்படி இறுதி ஒப்புதல் வழங்கவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**<u>மனைப்பிரிவில் உள்ள சாலைகளின் விபரம்</u>**

**<u>சாலை எண்.1</u>**

கிழமேல் சாலை – 87.90 மீ நீளம் 7.2 மீ அகலம், இந்த அளவுள்ள 632.88 ச.மீ

**<u>சாலை எண்.2</u>**

கிழமேல் சாலை – 80.00 மீ நீளம் 9.0 மீ அகலம், இந்த அளவுள்ள 720.00 ச.மீ

**<u>சாலை எண்.3</u>**

தென்வடல் சாலை – 80.15 மீ நீளம் 9.0 மீ அகலம், இந்த அளவுள்ள 721.35 ச.மீ

**<u>சாலை எண்.4</u>**

கிழமேல் சாலை – 20.30 மீ நீளம் 9.0 மீ அகலம், இந்த அளவுள்ள 182.70 ச.மீ ஆக மொத்த சாலை மற்றும் மூலை முடுக்கு உட்பட பரப்பளவு – 2272.68 ச.மீ.

**<u>பொது உபயோக இடம்</u> – 5.60 மீ X 5.40 மீ = 30.24 ச.மீ**

எனவே, மேற்கண்ட மனைப்பிரிவில் உள்ள சாலைகள் மற்றும் பொது உபயோக இடம் ஆகியவற்றை அரசாணை எண். 181 நாள் 09.12.2020 வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறையின்படி தானசாசனம் பத்திர பதிவின்படி மாநகராட்சி பெறப்பட்டதற்கு பின்னேற்பு வழங்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு-</u>

தானமாக பெறப்பட்ட இனங்களுக்கு மாமன்றம் பின்னேற்பு வழங்கலாம்.

**ந.க.எண்.இ1-1944-2021**

**281. பின்னேற்பு வழங்கப்பட்டது.**

**3.** ஈரோடு மாநகராட்சி மண்டலம்-1 சூரியம்பாளையம் கிராமம் ரீ.ச.எண்.227/3 ஜவுளி நகர் திரு. என்.ராஜசேகரன் என்பவருக்கு பாத்யப்பட்ட மனை எண்.612-ல் 2400 சதுர அடி மனையிடத்தில் பொதுகழிப்பிடம் 15"0x40"0 = 600 சதுர அடியில் மாநகராட்சியால் ஆக்கிரமித்து கட்டப்பட்டுள்ளது. எனவே இக்கட்டிடத்தினை அகற்றி தருமாறு நாள் 08.07.2022-ல் தேதியில் கடிதத்தில் கோரியுள்ளார். மேலும் மேற்படி இடத்தில் உள்ள பொது கழிப்பிடத்தினை சார் ஆய்வாளர் அவர்கள் ஆய்வு செய்து மனுதாரரின் மனையிடத்தில் 15"0x40"0 = 600 சதுர அடியில் பொது கழிப்பிடம் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளது என 18.11.2022-ல் அறிக்கை வழங்கப்பட்டுள்ளது.

இதனை தொடர்ந்து மனுதாரர் தனது இடத்தில் மாநகராட்சியால் ஆக்கிரமித்து கட்டப்பட்டுள்ள பொது கழிப்பிடத்தினை இடித்து விட்டு தனது

சொந்த செலவில் அருகில் உள்ள மாநகராட்சி சொந்தமான இடத்தில் புதியதாக கழிப்பிடம் கட்டித்தருவதாக 26.09.2022-ல் கடிதம் மூலம் தெரிவித்துள்ளார். எனவே மனுதாரர் இடத்தில் உள்ள பொது கழிப்பிடத்திற்கு மாற்றாக புதிதாக கழிப்பிடத்தை மனுதாரரின் சொந்த பொறுப்பில் கட்டி கொடுத்து பொதுமக்கள் பயன்பாட்டிற்கு வந்த பின்பு பழைய பொதுகழிப்பிட கட்டிடத்தினை இடித்து அப்புறப்படுத்த மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு-</u>

1. அனுமதி வழங்கலாம்.
2. அவசர அவசியம் கருதி மாண்புமிகு மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டமைக்கு அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.இ1-862-2022**

**282. அனுமதி வழங்கப்பட்டது.**

**4.** ஈரோடு மாநகராட்சி மண்டலம்-1 வைராபாளையம் மேல்நிலைத் தொட்டி கட்டியது தொடர்பாக ஈரோடு மாவட்ட முதல் கூடுதல் உரிமையியல் நடுவர் நீதிமன்றத்தில் A.S. No. 82/2019 மீது E.P.R. No. 54/2021 மீது திரு. V.A. தங்கராஜ் தாக்கல் செய்த மனு மீது அவருக்கு சாதகமாக தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. அதன்

மீது சென்னை உயர்நீதி மன்றத்தில் C.R.P against E.P.54/2021 தாக்கல் செய்யப்பட்டது. மேற்படி வழக்கில் மாநகராட்சி சார்பில் ஆஜராகி வாதாட மாநகராட்சி வழக்கறிஞர் திரு. எம். ராஜாமதிவாணனுக்கு அனுமதி வழங்கவும் அத்றகான செலவினம் ரூ. 20,000-க்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. அவசர அவசியத்தை முன்னிட்டு மாண்புமிகு மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேல் நடவடிக்கை எடுத்தமைக்கும் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு-</u>

1. அனுமதி வழங்கலாம்.
2. மாண்புமிகு மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேல் நடவடிக்கை எடுத்தமைக்கு ஒப்புதல் வழங்கலாம்.

**ந.க.எண்.இ1-2284-2019**

**283. <u>அனுமதி வழங்கப்பட்டது.</u>**

**5.** ஈரோடு மாநகராட்சி மண்டலம்-1 வைராபாளையம் மேல்நிலைத் தொட்டி கட்டியது தொடர்பாக O.S.No.23/2016 தீர்ப்பின் மீது திரு. V.A. தங்கராஜ் A.S.No.82/2019 வழக்கினை ஈரோடு மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கு தொகுத்தார்.

மேற்படி வழக்கில் திரு. V.A. தங்கராஜ்க்கு சாதகமாக தீர்ப்பு வழங்கப்பட்டது. அதன் மீது சென்னை உயர்நீதி மன்றத்தில் இரண்டாவது முறையீடு (Second Appeal) தாக்கல் செய்யப்பட்டது. மேற்படி வழக்கில் மாநகராட்சி சார்பில் ஆஜராகி வாதாட மாநகராட்சி வழக்கறிஞர் திரு. எம். ராஜாமதிவாணனுக்கு அனுமதி வழங்கவும் அதற்கான செலவினம் ரூ.20,000-க்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. அவசர அவசியத்தை முன்னிட்டு மாண்புமிகு மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேல் நடவடிக்கை எடுத்தமைக்கும் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு-</u>

1. அனுமதி வழங்கலாம்.
2. மாண்புமிகு மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேல் நடவடிக்கை எடுத்தமைக்கு ஒப்புதல் வழங்கலாம்.

**ந.க.எண்.இ1-2284-2019**

**284. அனுமதி வழங்கப்பட்டது.**

**6.** ஈரோடு மாநகராட்சி மண்டலம்-3க்குட்பட்ட வார்டு எண்.30 சக்தி நகர் பிரதான சாலையில் விநாயகர் கோவில் அருகில் உள்ள 10,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை தொட்டி பொதுமக்களுக்கு உபயோகமற்ற

நிலையில் மிகவும் பழுதடைந்து இடிந்து விழும் நிலையில் உள்ளது. எனவே மேற்கண்ட உபயோகமற்ற நிலையில் பொதுமக்களுக்கு ஆபத்து விளைவிக்கும் வண்ணம் உள்ள மேல்நிலை தொட்டியினை இடித்து அப்புறப்படுத்த தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.1.00 இலட்சத்திற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு-</u>

பொது மக்கள் நலன் கருதி அவசர அவசியத்தை முன்னிட்டு மாமன்ற அனுமதியை எதிர்நோக்கி மாண்புமிகு மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டமைக்கும் மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

**ந.க.எண்.இ1-2284-2019**

**285. அனுமதி வழங்கப்பட்டது.**

**7.** ஈரோடு மாநகராட்சி மண்டலம்-3க்குட்பட்ட புதிய வார்டு எண்.10 ஈரோடு மாவட்டம், ஈரோடு வட்டம், வில்லரசம்பட்டி கிராமம், பழைய க.ச.எண்.44B-க்கு புதிய ரீ.சர்வே எண். 253/9 நெ.பு.ஹெ. 1.13.0க்கு த.ரூ.3.13, பழைய க.ச.43/1க்கு புதிய

ரீ.சர்வே எண். 253/10B நெ.பு.ஹெ.0.12.0க்கு த.ரூ. 0.40, பழைய க.ச. 40Aக்கு புதிய ரீ.ச.257/1 நெ.பு.ஹெ.0.14.0க்கு த.ரூ.0.39 ஆக பு.ஹெ.1.39.0க்கு த.ரூ.3.92 இதற்கு பு.ஏ.3.44 விஸ்தீரண பூமியின் மத்தியில் உள்ள தென்வடல் சாலைக்கு இதன் மத்தியில் வடபுறமும் தென்புறமும் கிழமேல் 23 அடி (7.01 மீட்டர்), கிழபுறம் தென்வடல் (19.05 மீட்டர்), மேல்புறம் தென்வடல் (188.50 மீட்டர்), இந்தவகை அளவுள்ள (4358.03 சதுர மீட்டர்கள்) கொண்ட தென்வடல் சாலையானது பொதுமக்களின் பயன்பாட்டில் இருந்து வருகிறது. ஆனால் மேற்படி சாலையானது தற்போது வரை திரு. ப. கதிரேசன் த-பெ பழனிசாமி மற்றும் திரு. ப. தமிழரசு த-பெ பழனிசாமி ஆகியோர் பெயரிலேயே இருந்து வருகிறது. இந்நிலையில் மேற்படி சாலையினை தரமான தார்சாலையாக அமைத்தும், சாலையின் இருபுறங்களிலும் மழைநீர் வடிகால்கள் அமைத்தும், பிரதான குடிநீர் குழாய்கள் அமைத்தும், மின் கம்பங்கள் மற்றும் தெருவிளக்குகள் அமைத்தும், இச்சாலையினை பொதுமக்களின் போக்குவரத்து நலன் கருதி ஈரோடு மாநகராட்சி வசம் தானமாக ஒப்படைக்க மனு முழு மனதுடன் சம்மதம் அளித்துள்ளனர். எனவே மேற்படி நிலையில் உள்ள கிழபுறம் தென்வடல் (190.5

மீட்டர்), மேல்புறம் தென்வடல் (188.50 மீட்டர்), நீளமும் உடைய 4358.03 ச. மீட்டர்கள் கொண்ட சாலையினை இம்மாநகராட்சி வசம் தானமாக ஏற்றுக் கொள்ள மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு-**

பொதுமக்கள் மற்றும் போக்குவரத்து நலன் கருதியும், மனுதாரர்கள் அவர்களது சொந்த செலவிலேயே அடிப்படை வசதிகளை ஏற்படுத்தித் தருவதாக உறுதியளித்ததின் பேரில் அவசர அவசியத்தை முன்னிட்டு மாமன்ற அனுமதியை எதிர்நோக்கி மாண்புமிகு மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டமைக்கும் மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

**ந.க.எண்.இ2-1626-2022**

**286. அனுமதி வழங்கப்பட்டது.**

**8.** ஈரோடு மாநகராட்சி மண்டலம்-4க்குட்பட்ட வார்டு எண்.57 மற்றும் 58க்குட்பட்ட பகுதிகளில் நெடுஞ்சாலைத்துறையான பூந்துறை மெயின் சாலையை விரிவாக்கம் செய்யும் பணிகள் நடைபெற்று வந்தது. மேலும், இப்பணியின் போது மாநகராட்சிக்கு சொந்தமான குடிநீர் பகிர்மான குழாய்கள்

சரிசெய்யப்பட்டு பொதுமக்களுக்கு சீரான தண்ணீர் விநியோகம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. எனவே, மேற்கண்ட பணியின் அவசர அவசியம் கருதி மேற்படி பணியினை ஈரோடு மாநகராட்சி சட்டம் பிரிவு-15ன் கீழ் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டு உள்ளூர் விலைப்புள்ளிகள் பெறப்பட்டது. அதில் குறைந்த விலைவிகிதம் வழங்கிய திருவாளர். MPS கன்ஸ்ட்ரக்ஷன், ஈரோடு அவர்களின் விலைப்புள்ளியை ஏற்று மேற்படி பணியை செய்து முடிக்கப்பட்டு அதற்கான பட்டியல் தொகை ரூ. 1,48,882-ஐ திருவாளர் MPS கன்ஸ்ட்ரக்ஷன், ஈரோடு அவர்களுக்கு வழங்கியதை மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு-</u>

பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

**ந.க.எண்.இ2-1391-2022**

**287. பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது.**

**9.** ஈரோடு மாநகராட்சிக்குட்பட்ட மூன்றாண்டு குத்தகையினமான ஆடு வதை செய்யுமிடத்தில் கட்டணம் வசூலிக்கும் உரிமத்திற்கு **15.11.2022** அன்று பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. மேற்படி பொது ஏலத்திற்கு

வைப்புத் தொகை செலுத்திய நபர்கள் கீழ்க்கண்டுள்ளவாறு ஏலக் கேள்வித் தொகை கோரியுள்ளார்கள்.

| வ. எண். | குத்தகையினம் | ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கேள்வித் தொகை விவரம் | | |
|---|---|---|---|---|
| | | பெயர் திரு./திருமதி. | ஏலக் கேள்வித் தொகை ரூ. | ஒப்பந்தப்புள்ளி கேள்வித் தொகை ரூ. |
| 1. | ஆடு வதை செய்யுமிடத்தில் கட்டணம் வசூலிக்கும் உரிமம் | எஸ். அப்பாசாமி | கலந்து கொள்ளவில்லை | |
| | | ஆர். சரவணமூர்த்தி | கலந்து கொள்ளவில்லை | |
| | | எஸ். ராமலிங்கம் | 10,13,800– | |
| | | எஸ். லோகசாமி | கலந்து கொள்ளவில்லை | |
| | | ஜி. அருண்குமார் | 10,15,000– | |
| | | ஜெ. சுரேந்திரன் | 10,14,500– | |
| | | லிங்காஸ் மீடியா நெட்வொர்க் பிரைவேட் லிமிடெட் | கலந்து கொள்ளவில்லை | |
| | | ஜி. செல்வக்குமரேஷ் | 10,14,000– | |
| | | பெ. தனராஜ் | 10,13,500– | |
| | | எஸ். கோபாலகிருஷ்ணன் | 10,13,000– | |
| | | பி. கௌரிசங்கர் | | ஒப்பந்தப்புள்ளி வரப்பெறவில்லை |
| | | ஏ. செல்வராஜ் | | ஒப்பந்தப்புள்ளி வரப்பெறவில்லை |

ஆடு வதை செய்யுமிடத்தில் கட்டணம் வசூலிக்கும் உரிம இனத்திற்கு 31.05.2022 மற்றும் 13.07.2022 ஆகிய தேதிகளில் நடைபெற இருந்த பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நிர்வாக காரணங்களால் ஒத்தி வைக்கப்பட்டு 12.10.2022, 27.10.2022 மற்றும் 15.11.2022 ஆகிய தேதிகளில் பொது ஏலம் மற்றும்

ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. 15.11.2022–ந் தேதிய ஏலத்தில் திரு. ஜி. அருண்குமார் என்பவர் ரூ.10,15,000– உச்ச ஏலக் கேள்வித் தொகையாக கோரியுள்ளார்.

மேற்படி குத்தகையினத்தின் சென்ற 2019–20, 2020–21 மற்றும் 2021–22 ஆண்டுகளின் (குத்தகைத் தொகை முறையே ரூ.5,29,200+ரூ.25,00,000+ரூ.26,25,000=56,54,200/3) மூன்றாண்டு சராசரி ரூ.18,84,733– ஆகும்.

மேலும் மேற்படி குத்தகையினத்தை முந்தைய குத்தகைதாரர் இரண்டு ஆண்டுகள் நடத்தி வந்த நிலையில் மூன்றாம் ஆண்டிற்கு குத்தகையினத்தை தொடர்ந்து நடத்த விருப்பம் தெரிவிக்காத காரணத்தால் குத்தகை உரிமத்தை ரத்து செய்யப்பட்டு 01.04.2022 முதல் துறை மூலம் வசூல் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. துறை மூலம் வசூலில் ஒரு மாதத்திற்கு சராசரியாக ரூ.36,520– (ரூ.9130–/வாரம்) வசூல் செய்யப்பட்டு ஆண்டு வருமானம் சராசரியாக ரூ.4,38,240– ஆகும். மேலும் பணியாளர் ஊதியம் (ரூ.25,000– ஒருவர் வீதம் 2 பணியாளர்களுக்கு ரூ.50000/மாதம்) மற்றும் இரசீதுகள் அச்சடிப்பதற்கான அச்சுக்கூலி மாதத்திற்கு ரூ.5000– ஆகும். ஆக மொத்தம் ஓராண்டிற்கு சராசரியாக ரூ.6.60 இலட்சம் செலவாகிறது.

மேலும் தொடர்ந்து நிதியிழப்பினைத் தவிர்க்கும் பொருட்டு ஆடு வதை செய்யுமிடத்தில் கட்டணம் வசூலிக்கும் உரிமத்திற்கு 15.11.2022–ந் தேதியில் கோரப்பட்ட ஏலத்தில் திரு. ஜி. அருண்குமார் என்பவர் கோரியுள்ள உச்ச ஏலக் கேள்வித் தொகை ரூ.10,15,000–ஐ ஏற்பதற்கு மாமன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு-**

ஆடுவதை செய்யுமிட குத்தகையினத்திற்கான 15.11.2022ம் தேதிய உச்ச ஏலக்கேள்வி ரூ. 10,15,000-யை ஏற்பது குறித்து மாமன்றம் முடிவு செய்யலாம்.

**ந.க.எண்.அ1-136-2022**

**288. அனுமதி வழங்கப்பட்டது.**

**10.** ஈரோடு சார்பு நீதிமன்றம் மற்றும் மாவட்ட நீதிமன்றங்களில் தொடரப்படும் வழக்குகளில் மாநகராட்சி சார்பாக வாதாடுவதற்கு 25.02.2014–ந் தேதிய 874–ம் எண் தீர்மானத்தின்படி கீழேகுறிப்பிட்டுள்ளவர்களை மாநகராட்சி நிலை வழக்கறிஞராக நியமனம் செய்யப்பட்டுள்ளது.

1. திரு. எஸ். செங்கோட்டையன்,
   2, சம்பத்நகர் ரோடு, ஈரோடு–11.

2. திரு. எம். ஜெயப்பிரகாஷ்,
   46, மாணிக்கம்பாளையம்,
   வீரப்பன்சத்திரம் அஞ்சல், ஈரோடு.

3. திரு. எம். சுரேஷ்குமார்,
   125-A, EPP நகர், வீரப்பன்சத்திரம்,
   ஈரோடு.

மேற்குறிப்பிட்டுள்ளவர்கள் மாநகராட்சி நிலை வழக்கறிஞராக நியமனம் செய்யப்பட்டு ஏழு ஆண்டுகளுக்கு மேல் ஆகி விட்டதால், அவர்களது நியமனத்தை ரத்து செய்வதற்கும், நான்கு மண்டலங்களுக்கும் தலா ஒரு

வழக்கறிஞர் வீதம் நான்கு வழக்கறிஞர்களை நியமனம் செய்வதற்கும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு –</u>

மாநகராட்சி சார்பாக கடந்த ஏழு வருடங்களாக வழக்குகளை கவனித்து வரும் மூன்று மாநகராட்சி நிலை வழக்கறிஞர் நியமனங்களை ரத்து செய்யவும், தற்போது நான்கு மண்டலங்களுக்கும் நான்கு நிலை வழக்கறிஞர்களை நியமனம் செய்வதற்கும் மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

**ந.க.எண்.அ1-8327-2022**

**289. அனுமதி வழங்கப்பட்டது.**

**11.** ஈரோடு மாநகராட்சிக்குட்பட்ட ஹெம்மிங்வே வணிக வளாகத்தில் அமைந்துள்ள வணிக வளாக கடை எண்கள் 3, 4 ஆகிய கடைகளை திரு. கார்த்திக் என்பவரும், கடை எண். 1 திரு. ஏ. சுந்தரம் என்பவரும் 2005–ஆம் ஆண்டு முதல் குத்தகைக்கு எடுத்து நடத்தி வருகிறார்கள். தற்போது மேற்படி கடையினை தொடர்ந்து நடத்த இயலாத காரணத்தால் 24.11.2022–ந் தேதிய கடிதத்தில் மாநகராட்சி வசம் ஒப்படைப்பதாக தெரிவித்துள்ளார்கள். குத்தகைதாரர்கள் நவம்பர்–2022 வரையிலான குத்தகைத் தொகையினை செலுத்தியுள்ளார்கள்.

மேலும் ஹெம்மிங்வே வணிக வளாகத்தில் அமைந்துள்ள 5, 6 ஆகிய கடைகளுக்கு கீழ்க்கண்டுள்ள விவரப்படி குத்தகைத்தாரர்கள் குத்தகைத் தொகை செலுத்தப்படாததால் 23.11.2022–ல் பூட்டி சீல் வைக்கப்பட்டது.

| வ. எண். | கடை எண். | வரிவிதிப்பு எண். | குத்தகைதாரர் பெயர் | நிலுவை மாதங்கள் | மொத்தம் நிலுவைத் தொகை ரூ. |
|---|---|---|---|---|---|
| 1. | 5 | 056/67469 | திரு. ஜி. முனியன் | 4/22 முதல் 11/22 வரை | 23234– |
| 2. | 6 | 056/BD01/00442 | திரு. எம். முரளி | 4/20 முதல் 11/22 வரை | 23855– |

மேற்குறிப்பிட்டுள்ளவாறு குத்தகைதாரர்களுக்கு தொகை செலுத்தக் கோரி அறிவிப்பு கடிதம் மூலமும், பலமுறை நேரிலும் மற்றும் தொலைபேசி மூலமும் தெரிவிக்கப்பட்டது. ஆனால் நாளதுதேதி வரை வாடகை தொகையினை செலுத்தப்படவில்லை. எனவே, ஹெம்மிங்வே வணிக வளாகத்தில் அமைந்துள்ள வணிக வளாக கடை எண்கள் 1, 3, 4, 5, 6 ஆகிய கடைகளின் குத்தகைதாரர்களது உரிமத்தை நவம்பர்–2022 உடன் ரத்து செய்வதற்கு அனுமதி வேண்டப்படுகிறது. மேலும் கடை எண். 5, 6–ன் சட்டரீதியான நடவடிக்கைகள் மேற்கொண்டு குத்தகை நிலுவைத் தொகைகளை வசூல் செய்யும் பொருட்டு மேற்படியார் மீது ஈரோடு மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கு தொடர்வதற்கும் அதற்காகும் செலவினத்திற்கும் அனுமதி வேண்டப்படுகிறது.

மேலும், மேற்படி குத்தகை இனத்திற்கு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரவும், அறிவிப்பினை தினசரி நாளிதழில் வெளியிடவும், அதற்காகும் உத்தேச செலவினத் தொகை ரூ.25,000–க்கும் மாண்புமிகு மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று தொடர் நடவடிக்கை மேற்கொண்டமைக்கும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு –

1) மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

2) மாண்புமிகு மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று தொடர் நடவடிக்கை மேற்கொண்டமைக்கும் மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

**ந.க.எண்.அ1-3640-2020**

**290. அனுமதி வழங்கப்பட்டது.**

**12.** ஈரோடு மாநகராட்சி பகுதிகளில், காய்ச்சல் மற்றும் டெங்கு காய்ச்சல் நோய் தடுப்பு பணியான கொசு புழு மற்றும் கொசு ஒழிப்பு பணி மேற்கொள்ள தற்சமயம் மாநகராட்சி பகுதிகளில் 227 களப்பணியாளர்கள் (DBC) பணியமர்த்தி கொசு புழு மற்றும் கொசு ஒழிப்பு பணி மேற்கொள்ளப்படுகிறது.

மேற்கண்ட 227 பணியாளர்களில், 152 பணியாளர்கள் கொசு புழு மற்றும் கொசு ஒழிப்பு பணி மற்றும் புகை இயந்திரங்கள் கொண்டு பணிகள் மேற்கொள்ளவும், 75 பணியாளர்கள் கட்டிடங்கள் மற்றும் குடியிருப்புகள், மற்றும் சுற்றுப்புறங்களில் திறந்தவெளி காலியிடங்களில், தண்ணீர் தேங்கும் கலன்களை அப்புறப்படுத்தும் பணியிலும், சுகாதார கல்வி போதிக்கும் பணியிலும் பணிபுரிந்து வருகின்றனர்.

துணை இயக்குநர், சுகாதாரப் பணிகள், ஈரோடு அவர்களின் செயல்முறைகள் மற்றும் கடிதம் எண். 3793/அ4/2022, நாள்: 13.08.2022-ல்

தற்சமயம் பருவமழை காரணமாக, பொது மக்கள் காய்ச்சல் மற்றும் டெங்கு காய்ச்சல் நோயால் பாதிக்கப்படாமல் இருக்கும் பொருட்டு, டெங்கு தடுப்பு நடவடிக்கையாக 6 Day Block செயல்திட்டம் நடை முறைப்படுத்தவும், அதற்கான கொசு ஒழிப்பு களப்பணியாளர்களை கூடுதலாக பணியமர்த்தி பணி செய்யவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஈரோடு மாநகராட்சிப் பகுதிகளில் 300 வீடுகளுக்கு ஒரு பணியாளர் வீதம் பணி செய்ய வேண்டியுள்ளதால், கூடுதலாக 241 தற்காலிக கொசு ஒழிப்பு பணியாளர்களை பணியமர்த்திக்கொள்ள தெரிவிக்கப்பட்டுள்ளது.

16.08.2022 அன்று நடைபெற்ற மாண்புமிகு மருத்துவம் மற்றும் குடும்பநலத்துறை அமைச்சர் மற்றும் மாண்புமிகு நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்குதுறை அவர்களின் மாநில அளவிலான ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்திலும், 23.08.2022 அன்று ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலத்தில் நடைபெற்ற மாவட்ட அளவிலான கண்காணிப்பு குழு கூட்டத்திலும், 6 Day Block செயல்திட்டம் நடைமுறைப்படுத்த அறிவுறுத்தப்பட்டது.

இந்த அறிவுறுத்தலின்படி மாமன்ற தீர்மான எண். 188, நாள்: 30.09.2022-ல் ஒரு மணி நேரத்திற்கு ரூ. 88 வீதம் ஒரு நாளைக்கு 100 (DBC) கொசு ஒழிப்பு பணியாளர்களை தற்காலிகமாக பணியமர்த்துவதற்கு மாமன்ற அனுமதி பெறப்பட்டது. இதன் தொடர்சியாக மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் Schedule of Rate -ன்படி ஊதியம் ஒருமணி நேரத்திற்கு ரூ. 88 வீதம், ஒருநாளைக்கு ஒரு பணியாளருக்கு 4 மணி நேரத்திற்கு ரூ.352/- வீதத்தில் 100 பணியாளர்களை 2 மாதத்திற்கு (ஜனவரி-2023 மற்றும் பிப்ரவரி-2023) மாதத்திற்கு (மொத்த உத்தேச செலவினம் ரூ. 21,12,000/-) பணியமர்த்த மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:</u>**

கொசு ஒழிப்பு பணியின் அவசர அவசியம் கருதி கூடுதலாக 100 (DBC) கொசு ஒழிப்பு பணியாளர்களை, தற்காலிகமாக மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் Schedule of Rate -ன்படி ஊதியம் ஒருமணி நேரத்திற்கு ரூ. 88 வீதம், ஒருநாளைக்கு ஒரு பணியாளருக்கு 4 மணி நேரத்திற்கு ரூ.352/- வீதத்தில் 100 பணியாளர்களை 2 மாதத்திற்கு (ஜனவரி-2023 மற்றும் பிப்ரவரி-2023) (மொத்த உத்தேச செலவினம் ரூ. 21,12,000/-) பணியமர்த்த அனுமதி வழங்கலாம்.

**ந.க.எண்.எச்1-4950-2021**

**291. அனுமதி வழங்கப்பட்டது.**

**13.** ஈரோடு மாநகராட்சி மண்டலம்–II-க்குட்பட்ட வார்டு எண்.5,8,9,11,12,18,20,21, 22,27,28,29,35,36,37வரை உள்ள வார்டுகளில் குடிநீர் குழாய் திறப்பு பணிகள் மற்றும் பொறியியற் பிரிவு பணிகள் ஆகிய பணிகள் சுய உதவிக்குழு உறுப்பினர்கள் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேற்படி சுயஉதவிக்குழுக்களின் அனுமதிக்காலம் 31.12.2022-ஆம் தேதியுடன் முடிவடைகிறது. எனவே 01.01.2023 முதல் 31.03.2023 (ஜனவரி, பிப்ரவரி, மார்ச்) வரையிலான 3 மாதங்களுக்கான 85 நாட்களுக்கு கீழ்காணும் பட்டியலில் கண்டுள்ள சுய உதவிக்குழுக்களை கொண்டு பணிகளை மேற்கொள்ளவும், மேற்படி சுய உதவிக்குழுக்களில் பணிபுரியும் உறுப்பினர்களுக்கு ஈரோடு மாவட்ட

ஆட்சித் தலைவர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.6492/2020/எ2, நாள் 30.06.2022ன்படி நிர்ணயம் செய்யப்பட்டுள்ள குறைந்தபட்ச ஊதிய சட்டம் 1948ன் படி ஊதியம் நிர்ணயம் செய்து வழங்க பிறப்பிக்கப்பட்டுள்ள சுற்றறிக்கையின்படி நாள் ஒன்றுக்கு ரூ.707/– என்ற அடிப்படையில் (49 நபர்களுக்கு ஒரு நாள் ஊதியம் ரூ.707/-வீதம் 85 நாட்களுக்கான ஊதியம் ரூ.29,44,655/-) ஊதியம் வழங்கவும், உறுப்பினர்களிடம் பிடித்தம் செய்யப்படும் 12% EPF தொகையுடன் நிர்வாகப்பங்கு தொகை 13% (ரூ.2,94,000/-)ஆகியவற்றை EPF அலுவலகத்திற்கு செலுத்திடவும், அதற்காகும் உத்தேச செலவினம் ரூ.32,38,655/-ஐ மேற்கொள்ளவும் மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண் | குழுவின் பெயர் | உறுப்பினர்கள் எண்ணிக்கை | நாள் ஒன்றுக்கு ஊதியம் | மொத்த நாட்கள் | வழங்கப்பட வேண்டிய ஊதியம் | EPF 13% | மொத்த தொகை ரூ. |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | வானவில் மகளிர் சுயஉதவிக்குழு | 13 நபர்கள் | ரூ.707/- | 85 | 781235/- | 78,000/- | 8,59,235/- |
| 2 | வானவில் ஆடவர் சுயஉதவிக்குழு | 12 நபர்கள் | ரூ.707/- | 85 | 721140/- | 72,000/- | 7,93,140/- |
| 3 | ஸ்ரீ சக்தி ஆடவர் சுயஉதவிக்குழு | 12 நபர்கள் | ரூ.707/- | 85 | 721140/- | 72,000/- | 7,93,140/- |
| 4 | ஸ்ரீ சபரி ஆடவர் சுயஉதவிக்குழு | 12 நபர்கள் | ரூ.707/- | 85 | 721140/- | 72,000/- | 7,93,140/- |
| மொத்தம் | | 49 | | | 29,44,655/- | 2,94,000/- | 32,38,655/- |

அலுவலகக் குறிப்பு

1. அனுமதி வழங்கலாம்.
2. மேற்காணும் பட்டியலில் கண்டுள்ள சுயஉதவிக்குழுக்களின் மூலம் ஜனவரி, பிப்ரவரி மற்றும் மார்ச்-2023 ஆகிய மூன்று மாத காலத்திற்கு பணி மேற்கொள்ள அனுமதியும், ஈரோடு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் உத்தரவு ந.க.எண்.6492/2020/எ2, நாள் 30.06.2022–ன்படி ஊதியம் வழங்கவும் மாமன்ற அனுமதியை எதிர்நோக்கி முன் அனுமதி பெற்று பணிகள் மேற்கொண்டமைக்கும் மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

**ந.க.எண்.இ1-1119-2018**

**292. அனுமதி வழங்கப்பட்டது.**

**14.** ஈரோடு மாநகராட்சி மண்டலம்–III-க்குட்பட்ட வார்டு எண்.10,19,30,31,32,33,34, 44,45,46,47,48,49,50,51 வரை உள்ள வார்டுகளில் குடிநீர் குழாய் திறப்பு பணிகள் மற்றும் பொறியியற் பிரிவு பணிகள் ஆகிய பணிகள் சுய உதவிக்குழு உறுப்பினர்கள் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேற்படி சுய உதவிக்குழுக்களில் பணிபுரியும் பணியாளர்களுக்கு ஈரோடு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.6492/2022/எ2 நாள். 30.06.2022–ல் ன்படி நிர்ணயம் செய்யப்பட்டுள்ள குறைந்தபட்ச ஊதிய சட்டம் 1948ன் படி தினக்கூலி பணியாளர்கள் / பகுதி நேரப்பணியாளர்களுக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ள தினக்கூலி ஊதியம் நிர்ணயம் செய்து வழங்க பிறப்பிக்கப்பட்டுள்ள சுற்றறிக்கையின்படி நாள் ஒன்றுக்கு ரூ.707/– என்ற தினக்கூலி அடிப்படையில் 01.01.2023 முதல் 31.03.2023 (ஜனவரி, பிப்ரவரி, மார்ச்)

வரையிலான 3 மாதங்களுக்கான 88 நாட்களுக்கு கீழ்காணும் பட்டியலில் கண்டுள்ள சுய உதவிக்குழு பணியாளர்களைக் கொண்டு பணிகளை மேற்கொள்ளவும், மேற்படி பணியாளர்களுக்கு ஊதியம் வழங்கவும், பணியாளர்களிடம் பிடித்தம் செய்யப்படும் 12% EPF தொகையுடன் நிர்வாகப்பங்கு தொகை 13% ஆகியவற்றை EPF அலுவலகத்திற்கு செலுத்திடவும் அதற்காகும் உத்தேச செலவினம் ரூ.34,30,416/-ஐ மேற்கொள்ளவும் மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண் | குழுவின் பெயர் | உறுப்பினர்கள் எண்ணிக்கை | நாள் ஒன்றுக்கு ஊதியம் | மொத்த நாட்கள் | வழங்கப்பட வேண்டிய ஊதியம் | EPF 13% | மொத்த தொகை ரூ. |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | திருக்கைலாசநாதர் ஆடவர் சுயஉதவிக்குழு | 12 நபர்கள் | ரூ.707/ | 88 | 746592/- | 70,200/- | 8,16,792/- |
| 2 | அன்னை ஆடவர் சுயஉதவிக்குழு | 13 நபர்கள் | ரூ.707/ | 88 | 808808/- | 76,050/- | 8,84,858/- |
| 3 | வசந்தம் ஆடவர் சுயஉதவிக்குழு | 14 நபர்கள் | ரூ.707/ | 88 | 871024/- | 70,200/- | 9,41,224/- |
| 4 | மருதம் ஆடவர் சுயஉதவிக்குழு | 12 நபர்கள் | ரூ.707 | 88 | 746592/ | 40,950/- | 7,87,542/ |
| மொத்தம் | | 51 | | | 31,73,016 | 2,57,400 | 34,30,416 |

அலுவலகக் குறிப்பு

1. அனுமதி வழங்கலாம்.
2. ஈரோடு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் உத்தரவு ந.க.எண்.6492/2022/எ2 நாள். 30.06.2022 –ன்படி குடிநீர் குழாய் திறப்பு பணியாளர்கள் மற்றும் பொறியியற் பிரிவு பணியாளர்கள்

ஆகியோருக்கு ஜனவரி, பிப்ரவரி, மார்ச்–2023 ஆகிய மூன்று மாத காலத்திற்கு சுய உதவிக்குழு மூலம் பணிகள் மேற்கொள்ளவும், அதற்கான ஊதியம் வழங்கவும் மாமன்ற அனுமதியை எதிர்நோக்கி முன் அனுமதி பெற்று பணிகளை மேற்கொள்ள மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

**ந.க.எண்.இ2-2630-2019-ம3**

**293. அனுமதி வழங்கப்பட்டது.**

**15.** ஈரோடு மாநகராட்சிக்குட்பட்ட பகுதியில், ஈரோடு மேற்கு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் 2021-22-ன் கீழ் ஈரோடு மாநகராட்சி மண்டலம்-1 க்குட்பட்ட வார்டு எண்: 5 ஐவுளி நகர் ஆரம்ப பள்ளிக்கு கூடுதல் வகுப்பறை கட்டுதல் பணியினை ரூ.35.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள மாவட்ட ஆட்சித் தலைவர் / தலைவர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, ஈரோடு மாவட்டம் அவர்களால் ந.க.எண்: 1279/2022/அ3 நாள்: 14.06.2022-ம் தேதியன்று நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட பணிக்கு E-Tendering அல்லது மூடிமுத்திரையிட்ட உறை முறையில் 12.08.2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை அனுமதிக்கப்பட்ட விலை விகிதத்துடன் ஒப்புநோக்கும் பொழுது பெறப்பட்ட விபரம் பின்வருமாறு.

| | |
|---|---|
| 1) திருவாளர். P.T.K.Construction | (-) 0.07 % சதவீதம் அனுமதிக்கப்பட்ட மதிப்பீட்டை விட குறைவு. |
| 2) திருவாளர். Vetri Construction | (+) 1.15 % சதவீதம் அனுமதிக்கப்பட்ட மதிப்பீட்டை விட அதிகம். |

மேற்கண்ட பணிக்கு 1 சதவீதம் டேவணித் தொகையை ஒப்பந்ததாரர்கள் செலுத்தியுள்ளனர், எனவே வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவானதாகவும் மற்றும் அனுமதிக்கப்பட்ட மதிப்பீட்டை விட (-)0.07 சதவீதத்தில் குறைவான விலைவிகிதம் அளித்துள்ள ஒப்பந்ததாரர் திருவாளர். P.T.K.Construction நிறுவனத்தாரின் ஒப்பந்தப்புள்ளி விலை விகிதத்தை ஏற்க மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u> :

1. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவானதாகவும் மற்றும் அனுமதிக்கப்பட்ட மதிப்பீட்டை விட (-)0.07 சதவீதத்தில் குறைவான விலைவிகிதம் அளித்துள்ள ஒப்பந்ததாரர் திருவாளர். P.T.K.Construction நிறுவனத்தாரின் ஒப்பந்தப்புள்ளி விலை விகிதத்தை ஏற்கலாம்.
2. மேலும் திட்டப் பணியின் அவசர அவசியம் கருதி திருவாளர். P.T.K.Construction நிறுவனத்தாரின் ஒப்பந்தப்புள்ளி விலை விகிதத்தை ஏற்க மாமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி மாண்புமிகு மேயர் அவர்களின் முன்அனுமதிப் பெற்று நடவடிக்கை மேற்கொண்டமைக்கும் ஒப்புதல் வழங்கலாம்.

**ந.க.எண்.இ1-0692-2022-1**

**294. ஒப்புதல் வழங்கப்பட்டது.**

**16.** ஈரோடு மாநகராட்சிக்குட்பட்ட பகுதியில், ஈரோடு மேற்கு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் 2021-22-ன் கீழ் ஈரோடு மாநகராட்சி மண்டலம்-1 க்குட்பட்ட வார்டு எண்: 4 தண்ணீர் பந்தல் பாளையம் நடுநிலைப் பள்ளியில் கூடுதல் வகுப்பறை கட்டுதல் பணியினை ரூ.35.00 இலட்சம்

மதிப்பீட்டில் மேற்கொள்ள மாவட்ட ஆட்சித் தலைவர் / தலைவர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, ஈரோடு மாவட்டம் அவர்களால் ந.க.எண்: 1279/2022/அ3 நாள்: 14.06.2022-ம் தேதியன்று நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட பணிக்கு E-Tendering அல்லது மூடிமுத்திரையிட்ட உறை முறையில் 12.08.2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை அனுமதிக்கப்பட்ட விலை விகிதத்துடன் ஒப்புநோக்கும் பொழுது பெறப்பட்ட விபரம் பின்வருமாறு.

| | |
|---|---|
| 1) திருவாளர். Balaguru Infra | (-) 0.06 % சதவீதம் அனுமதிக்கப்பட்ட மதிப்பீட்டை விட குறைவு. |
| 2) திருவாளர். Myans Infastructure | (+) 1.45 % சதவீதம் அனுமதிக்கப்பட்ட மதிப்பீட்டை விட அதிகம். |

மேற்கண்ட பணிக்கு 1 சதவீதம் டேவணித் தொகையை ஒப்பந்ததாரர்கள் செலுத்தியுள்ளனர், எனவே வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவானதாகவும் மற்றும் அனுமதிக்கப்பட்ட மதிப்பீட்டை விட (-)0.06 சதவீதத்தில் குறைவான விலைவிகிதம் அளித்துள்ள ஒப்பந்ததாரர் திருவாளர். Balaguru Infra நிறுவனத்தாரின் ஒப்பந்தப்புள்ளி விலை விகிதத்தை ஏற்க மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u> :**

**1.** வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவானதாகவும் மற்றும் அனுமதிக்கப்பட்ட மதிப்பீட்டை விட (-)0.06 சதவீதத்தில் குறைவான விலைவிகிதம் அளித்துள்ள ஒப்பந்ததாரர் திருவாளர். Balaguru Infra நிறுவனத்தாரின் ஒப்பந்தப்புள்ளி விலை விகிதத்தை ஏற்கலாம்.

2. மேலும் திட்டப் பணியின் அவசர அவசியம் கருதி திருவாளர். Balaguru Infra நிறுவனத்தாரின் ஒப்பந்தப்புள்ளி விலை விகிதத்தை ஏற்க மாமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி மாண்புமிகு மேயர் அவர்களின் முன்அனுமதிப் பெற்று நடவடிக்கை மேற்கொண்டமைக்கும் ஒப்புதல் வழங்கலாம்.

**ந.க.எண்.இ1-0692-2022-2**

**295. ஒப்புதல் வழங்கப்பட்டது.**

**17.** ஈரோடு மாநகராட்சி மண்டலம்-2க்குட்பட்ட Restoration of B.T Surface Damaged due to UGSS Shemes and Water Supply Schemes at VCTV main road from market to APT road 1 (056036R2904) APT main Road MCC (056036R2918) in Ward No :36 பணியினை ரூ.17.90 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள நாள்.11.07.2022-ம் தேதியன்று மாண்புமிகு மேயர் அவர்களின் நிர்வாக முன்அனுமதிப் பெறப்பட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து மேற்கண்ட பணிக்கு E-Tendering அல்லது மூடிமுத்திரையிட்ட உறை முறையில் 12.08.2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை அனுமதிக்கப்பட்ட விலை விகிதத்துடன் ஒப்புநோக்கும் பொழுது பெறப்பட்ட விபரம் பின்வருமாறு.

| | |
|---|---|
| 1) திருவாளர். Vetri Construction | (-) 0.15 சதவீதம் அனுமதிக்கப்பட்ட மதிப்பீட்டை விட குறைவு. |
| 2) திருவாளர். P.T.K.Construction | (+) 1.30 சதவீதம் அனுமதிக்கப்பட்ட மதிப்பீட்டை விட அதிகம். |

மேற்கண்ட பணிக்கு 1 சதவீதம் டேவணித் தொகையை ஒப்பந்ததாரர்கள் செலுத்தியுள்ளனர், எனவே வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவானதாகவும் மற்றும் அனுமதிக்கப்பட்ட மதிப்பீட்டை விட (-)0.15 சதவீதத்தில் குறைவான விலைவிகிதம் அளித்துள்ள ஒப்பந்ததாரர் திருவாளர். Vetri Construction நிறுவனத்தாரின் ஒப்பந்தப்புள்ளி விலை விகிதத்தை ஏற்க மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவானதாகவும் மற்றும் அனுமதிக்கப்பட்ட மதிப்பீட்டை விட (-)0.15 சதவீதத்தில் குறைவான விலைவிகிதம் அளித்துள்ள ஒப்பந்ததாரர் திருவாளர். Vetri Construction நிறுவனத்தாரின் ஒப்பந்தப்புள்ளி விலை விகிதத்தை ஏற்கலாம்.
2. மேலும் பணியின் அவசர அவசியம் கருதி திருவாளர். Vetri Construction நிறுவனத்தாரின் ஒப்பந்தப்புள்ளி விலை விகிதத்தை ஏற்க மாமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி மாண்புமிகு மேயர் அவர்களின் முன்அனுமதிப் பெற்று நடவடிக்கை மேற்கொண்டமைக்கும் ஒப்புதல் வழங்கலாம்.

**ந.க.எண்.இ1-1162-2022**

**296. ஒப்புதல் வழங்கப்பட்டது.**

**18.** ஈரோடு மாநகராட்சிக்குட்பட்ட பகுதியில், ஈரோடு பாராளுமன்ற உறுப்பினர்

உள்ளூர் வளர்ச்சி திட்டம் 2022-23-ன் கீழ் மண்டலம்-3 வார்டு எண்.50 மலைக்கோவில் முகப்பு முதல் கோவில் வரை தார்சாலை அமைத்தல் பணியினை ரூ.25.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள மாவட்ட ஆட்சித் தலைவர் /

தலைவர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, ஈரோடு மாவட்டம் அவர்களால் ந.க.எண்: 3849/2022/அ3 நாள்: 02.08.2022-ம் தேதியன்று நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட பணிக்கு E-Tendering அல்லது மூடிமுத்திரையிட்ட உறை முறையில் 27.09.2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை அனுமதிக்கப்பட்ட விலை விகிதத்துடன் ஒப்புநோக்கும் பொழுது பெறப்பட்ட விபரம் பின்வருமாறு.

| | |
|---|---|
| 1) திருவாளர். Solaiappan Constructions | (-) 0.04 % சதவீதம் அனுமதிக்கப்பட்ட மதிப்பீட்டை விட குறைவு. |
| 2) திரு. M. Sakthivel | (+) 1.65 % சதவீதம் அனுமதிக்கப்பட்ட மதிப்பீட்டை விட அதிகம். |

மேற்கண்ட பணிக்கு 1 சதவீதம் டேவணித் தொகையை ஒப்பந்ததாரர்கள் செலுத்தியுள்ளனர், எனவே வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவானதாகவும் மற்றும் அனுமதிக்கப்பட்ட மதிப்பீட்டை விட (-)0.04 சதவீதத்தில் குறைவான விலைவிகிதம் அளித்துள்ள ஒப்பந்ததாரர் திருவாளர். Solaiappan Constructions நிறுவனத்தாரின் ஒப்பந்தப்புள்ளி விலை விகிதத்தை ஏற்க மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவானதாகவும் மற்றும் அனுமதிக்கப்பட்ட மதிப்பீட்டை விட (-)0.04 சதவீதத்தில் குறைவான விலைவிகிதம் அளித்துள்ள ஒப்பந்ததாரர் திருவாளர். Solaiappan Constructions நிறுவனத்தாரின் ஒப்பந்தப்புள்ளி விலை விகிதத்தை ஏற்கலாம்.

2. மேலும் திட்டப் பணியின் அவசர அவசியம் கருதி திருவாளர். Solaiappan Constructions நிறுவனத்தாரின் ஒப்பந்தப்புள்ளி விலை விகிதத்தை ஏற்க மாமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி மாண்புமிகு மேயர் அவர்களின் முன்அனுமதிப் பெற்று நடவடிக்கை மேற்கொண்டமைக்கும் ஒப்புதல் வழங்கலாம்.

**ந.க.எண்.இ1-0910-2022-2**

**297. ஒப்புதல் வழங்கப்பட்டது.**

**19.** ஈரோடு மாநகராட்சிக்குட்பட்ட பகுதியில், ஈரோடு பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் வளர்ச்சி திட்டம் 2021-22-ன் கீழ் மண்டலம்-3 வார்டு எண்.30 புதுக்காலனி குறுக்கு வீதி முனியப்பன் கோவில் வீதி முதல் செம்மாம்பாளையம் சந்திப்பு சாலை வரை கான்கிரீட் சாலை மற்றும் மழைநீர் வடிகால் அமைத்தல் பணியினை ரூ.13.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள மாவட்ட ஆட்சித் தலைவர் / தலைவர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, ஈரோடு மாவட்டம் அவர்களால் ந.க.எண்: 1050/2022/அ3 நாள்: 02.08.2022-ம் தேதியன்று நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட பணிக்கு E-Tendering அல்லது மூடிமுத்திரையிட்ட உறை முறையில் 27.09.2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை அனுமதிக்கப்பட்ட விலை விகிதத்துடன் ஒப்புநோக்கும் பொழுது பெறப்பட்ட விபரம் பின்வருமாறு.

| | |
|---|---|
| 1) திருவாளர். Balaguru Infra | (-) 0.05 % சதவீதம் அனுமதிக்கப்பட்ட மதிப்பீட்டை விட குறைவு. |
| 2) திரு. K.N.Prasanna | (+) 1.04 % சதவீதம் அனுமதிக்கப்பட்ட மதிப்பீட்டை விட அதிகம். |

மேற்கண்ட பணிக்கு 1 சதவீதம் டேவணித் தொகையை ஒப்பந்ததாரர்கள் செலுத்தியுள்ளனர், எனவே வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவானதாகவும் மற்றும் அனுமதிக்கப்பட்ட மதிப்பீட்டை விட (-)0.05 சதவீதத்தில் குறைவான விலைவிகிதம் அளித்துள்ள ஒப்பந்ததாரர் திருவாளர். Balaguru Infra நிறுவனத்தாரின் ஒப்பந்தப்புள்ளி விலை விகிதத்தை ஏற்க மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u> :**

1. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவானதாகவும் மற்றும் அனுமதிக்கப்பட்ட மதிப்பீட்டை விட (-)0.05 சதவீதத்தில் குறைவான விலைவிகிதம் அளித்துள்ள ஒப்பந்ததாரர் திருவாளர். Balaguru Infra நிறுவனத்தாரின் ஒப்பந்தப்புள்ளி விலை விகிதத்தை ஏற்கலாம்.
2. மேலும் திட்டப் பணியின் அவசர அவசியம் கருதி திருவாளர். Balaguru Infra நிறுவனத்தாரின் ஒப்பந்தப்புள்ளி விலை விகிதத்தை ஏற்க மாமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி மாண்புமிகு மேயர் அவர்களின் முன்அனுமதிப் பெற்று நடவடிக்கை மேற்கொண்டமைக்கும் ஒப்புதல் வழங்கலாம்.

**ந.க.எண்.இ1-0831-2022**

**298. ஒப்புதல் வழங்கப்பட்டது.**

**20.** ஈரோடு மாநகராட்சிக்குட்பட்ட பகுதியில், ஈரோடு பாராளுமன்ற உறுப்பினர்

உள்ளூர் வளர்ச்சி திட்டம் 2022-23-ன் கீழ் மண்டலம்-2 வார்டு எண்.9 அடுக்குபாறை (குபேந்திரன் நகர் முதல் ஓடை மேற்கு பகுதி வரை) மழைநீர் வடிகால் கட்டுதல் பணியினை ரூ.30.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள

மாவட்ட ஆட்சித் தலைவர் / தலைவர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, ஈரோடு மாவட்டம் அவர்களால் ந.க.எண்: 3849/2022/அ3 நாள்: 21.08.2022-ம் தேதியன்று நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட பணிக்கு E-Tendering அல்லது மூடிமுத்திரையிட்ட உறை முறையில் 27.09.2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோாரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை அனுமதிக்கப்பட்ட விலை விகிதத்துடன் ஒப்புநோக்கும் பொழுது பெறப்பட்ட விபரம் பின்வருமாறு.

| | |
|---|---|
| 1) திருவாளர். Yes Pee Associates | (-) 0.06 % சதவீதம் அனுமதிக்கப்பட்ட மதிப்பீட்டை விட குறைவு. |
| 2) திருவாளர். Te Yellow City Builders | (+) 2.08 % சதவீதம் அனுமதிக்கப்பட்ட மதிப்பீட்டை விட அதிகம். |

மேற்கண்ட பணிக்கு 1 சதவீதம் டேவணித் தொகையை ஒப்பந்ததாரர்கள் செலுத்தியுள்ளனர், எனவே வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவானதாகவும் மற்றும் அனுமதிக்கப்பட்ட மதிப்பீட்டை விட (-)0.06 சதவீதத்தில் குறைவான விலைவிகிதம் அளித்துள்ள ஒப்பந்ததாரர் திருவாளர். Yes Pee Associates நிறுவனத்தாரின் ஒப்பந்தப்புள்ளி விலை விகிதத்தை ஏற்க மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவானதாகவும் மற்றும் அனுமதிக்கப்பட்ட மதிப்பீட்டை விட (-)0.06 சதவீதத்தில் குறைவான விலைவிகிதம் அளித்துள்ள ஒப்பந்ததாரர் திருவாளர். Yes Pee Associates நிறுவனத்தாரின் ஒப்பந்தப்புள்ளி விலை விகிதத்தை ஏற்கலாம்.

2. மேலும் திட்டப் பணியின் அவசர அவசியம் கருதி திருவாளர். Yes Pee Associates நிறுவனத்தாரின் ஒப்பந்தப்புள்ளி விலை விகிதத்தை ஏற்க மாமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி மாண்புமிகு மேயர் அவர்களின் முன்அனுமதிப் பெற்று நடவடிக்கை மேற்கொண்டமைக்கும் ஒப்புதல் வழங்கலாம்.

**ந.க.எண்.இ1-0910-2022**

**299. ஒப்புதல் வழங்கப்பட்டது.**

**21.** ஈரோடு மாநகராட்சிக்குட்பட்ட பகுதியில், ஈரோடு பாராளுமன்ற உறுப்பினர்

உள்ளூர் வளர்ச்சி திட்டம் 2022-23-ன் கீழ் மண்டலம்-1 வார்டு எண்.25 அப்துல்கலாம் நகரில் மழைநீர் வடிகால் மற்றும் தார்சாலை அமைத்தல் பணியினை ரூ.20.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள மாவட்ட ஆட்சித் தலைவர் / தலைவர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, ஈரோடு மாவட்டம் அவர்களால் ந.க.எண்: 3849/2022/அ3 நாள்: 02.08.2022-ம் தேதியன்று நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட பணிக்கு E-Tendering அல்லது மூடிமுத்திரையிட்ட உறை முறையில் 27.09.2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை அனுமதிக்கப்பட்ட விலை விகிதத்துடன் ஒப்புநோக்கும் பொழுது பெறப்பட்ட விபரம் பின்வருமாறு.

| | |
|---|---|
| 1) திருவாளர். Yes Pee Associates | (-) 0.06 % சதவீதம் அனுமதிக்கப்பட்ட மதிப்பீட்டை விட குறைவு. |
| 2) திருவாளர். Te Yellow City Builders | (+) 2.28 % சதவீதம் அனுமதிக்கப்பட்ட மதிப்பீட்டை விட அதிகம். |

மேற்கண்ட பணிக்கு 1 சதவீதம் டேவணித் தொகையை ஒப்பந்ததாரர்கள் செலுத்தியுள்ளனர், எனவே வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவானதாகவும் மற்றும் அனுமதிக்கப்பட்ட மதிப்பீட்டை விட (-)0.06 சதவீதத்தில் குறைவான விலைவிகிதம் அளித்துள்ள ஒப்பந்ததாரர் திருவாளர். Yes Pee Associates நிறுவனத்தாரின் ஒப்பந்தப்புள்ளி விலை விகிதத்தை ஏற்க மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u> :

1. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவானதாகவும் மற்றும் அனுமதிக்கப்பட்ட மதிப்பீட்டை விட (-)0.06 சதவீதத்தில் குறைவான விலைவிகிதம் அளித்துள்ள ஒப்பந்ததாரர் திருவாளர். Yes Pee Associates நிறுவனத்தாரின் ஒப்பந்தப்புள்ளி விலை விகிதத்தை ஏற்கலாம்.
2. மேலும் திட்டப் பணியின் அவசர அவசியம் கருதி திருவாளர். Yes Pee Associates நிறுவனத்தாரின் ஒப்பந்தப்புள்ளி விலை விகிதத்தை ஏற்க மாமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி மாண்புமிகு மேயர் அவர்களின் முன்அனுமதிப் பெற்று நடவடிக்கை மேற்கொண்டமைக்கும் ஒப்புதல் வழங்கலாம்.

**ந.க.எண்.இ1-0910-2022-1**

**300. ஒப்புதல் வழங்கப்பட்டது.**

**இடம்- ஈரோடு** **மேயர்.**

**நாள். 29.12.2022** **ஈரோடு மாநகராட்சி.**

**ஈரோடு**